செ.வெ.எண்:1004 **செய்திக் குறிப்பு** 19.11.08

தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியத்தினுடைய செய்தி ஏட்டின் முதல் பிரதியை மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர், 19/11/2008 அன்று சென்னையில் மாநிலத்திட்டக்குழுவில் வெளியிட்டார்.

புவிப்பரப்பு அறிவியல்களில் இந்தியா ஒரு முதன்மையான நாடாக உருவாகி வருகிறது. தகவல் தொழில் நுட்பத்தின் உதவியால் வரைபடம் உருவாக்குதல், ஆராய்ச்சி, தகவல்களை அளித்தல் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, இத்தகைய தொழில் நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி நம் நாட்டில் புவியியல் தகவல் அளிப்பதில் காணப்படும் இடைவெளிகளை நீக்க வேண்டும்.

மாநிலத் திட்டக்குழுவின் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியம், சிறந்த முறையில் நிலவள, நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்ய நீர் மறுசெறிவூட்டும் ஆய்வுகள் வண்டல் அகற்றும் ஆய்வுகள், நீர்நிலைகள் மீட்கும் ஆய்வுகள் போன்ற புவியியல் தகவல் அமைப்பு & தொலையுணர்வு சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு மாநில நிலப்பயப்பாட்டு வாரியத்தின் தலைவரான மாநிலத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் அவர்கள், செய்தி ஏட்டின் முதல் பிரதியை, 19/11/2008 அன்று மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்-செயலர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டதை தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம் பெருமையாகக் கருதுகிறது. இந்நாள் (19/11/2008) புவியியல் தகவல் அமைப்பு நாள் என்று கொண்டாடப்படுகிறது.

ESRI அமைப்பைச் சேர்ந்த திரு. கிருஷ்ணா ராவ் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவின் அலுவலர்கள், ஊழியர்களிடையே `புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையிக் கோட்பாடுகள்' என்ற பொருளில் உரை நிகழ்த்தினார்.

***************

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9